★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 7 ஜுல்ஹஜ் 21 இதழ்: 233
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23-11-78

10

பிக்வைற்

நீலசோப்

மேலுறை

களை அனுப்பி



"ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டில் நல்லொழுக்கம்" என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பிக்வைற் [illegible] யாழ்ப்பாணம்

## பிக்கு வேடத்தில் கேடி கைது

(கொழும்பு)

பிக்கு வேடத்தில் பல நம்பிக்கை மோசடிகள் புரிந்தவர் எனக் கூறப்படும் பிரபல கேடி ஒருவரை பொலீசார் நேற்று கொழும்பில் வைத்துக் கைது செய்தனர்.

# 'தமிழ் ராஜ்யம்' நிறுவ அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## பாராளுமன்றத்தில் பிரதமர் வலியுறுத்து

(கொழும்பு)

"இந்நாட்டில் புறம்பானதொரு தமிழ் ராஜ்யம் நிறுவுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி அளிக்காது" என்று பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையில் வலியுறுத்திக் கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வீ. என். நவரத்தினம் சிறுபான்மையினர் பிரச்சினை குறித்து பிரஸ்தாபித்து உரையாற்றியதற்குப் பதிலளிக்குமுகமாகவே பிரதமர் இவ்வாறு சொன்னார்.

வடக்கு, கிழக்கில் சிறுபான்மையினருக்கு உள்ள பிரச்சினைகள் குறித்து சாவகச்சேரி எம். பி. தமது உரையில் குறிப்பிட்டார். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் விவசாயிகளுக்கு உண்டாகியுள்ள பாதிப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில், "இன்றைய சூழ்நிலையில் நாட்டை எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளுக்குத் தேசிய ஐக்கியமே தேவைப்படுகிறது. புதிய அரசியலமைப்பு மூலம் பாரபட்சமற்ற சமதர்ம சமுதாயத்திற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் புறம்பானதொரு தமிழ்ராஜ்யம் நிறுவுவதற்கு அரசு ஒருபோதும் அனுமதியளிக்காது என்றார். [உ]

## ரூ. 9600 தங்கநகைகள் அச்சுவேலியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் உள்ள வீடொன்றில் இருந்து 9600 ரூபா பெறுமதிமிக்க தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டு காலை 5-30க்கும் 7-00 மணிக்கும் இடையில் நடைபெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இத்திருட்டு பற்றி செய்யப் (6-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் ஔவையார்

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு நேற்று ஔவைப்பிராட்டியார் திடீரென விஜயம் செய்தார். தனது கனிந்த தமிழ் மொழியில் கவிதை மழை பொழிந்தார்!

இச் சம்பவம் இவ்விதமாகத்தான் நடந்தது;

மன்னார் எம். பி. திரு. சூசைதாசன் நேற்று பாராளுமன்றத்தில் பட்ஜட் விவாதத்தில் உரைநிகழ்த்திக் கொண்டிருக்கையில்:

"அரசாங்கம் முதலில் மன்னாருக்கு மகாவலி மின்சாரம் தருவதாகக் கூறியது. பின்னர் ஜெனரேட்டர் என்றும், மகாவலி தண்ணீர் என்றும் கூறிய போதிலும் எதுவுமே — மின்சாரமோ தண்ணீரோ— எமக்குக் கிடைக்கவில்லை..." என்று ஆங்கிலத்தில் தெரிவித்து, ஔவையாரின் பாடலொன்றை அழகாகப் பாடினார்;

'கரியாகி பரியாகி கார் எருமைதானாகி, எருதாகி முழுப்புடவையாகி, திரி திரியாய் தேரைக்கால் பெற்று மிக தேய்ந்து கால் ஓய்ந்ததே கோரைக்கால் ஆள்வான் கொடை.'

என்று பாடி முடித்தார்.

## நாவலர் குருபூசையும் நூல்வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆதரவில் சபை ஆச்சிரம மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது. காலை 9 மணிக்கு சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜையும் (6-ம் பக்கம் பார்க்க)

## இன்று காங்கேசன் கரையை சூறாவளி பாதிக்கலாம்

### அவதான நிலையம் எச்சரிக்கை.

(கொழும்பு)

இன்று காங்கேசன்துறை-அம்பாந்தோட்டை கடற்கரை பிரதேசத்தை சூறாவளி பாதிக்கலாம் என காலநிலையம் எச்சரித்துள்ளது.

இப்பகுதிகளில் கடல் கொந்தளிப்பு இருக்கும் எனவும் பலமான காற்று வீசுமெனவும் இவ்வெச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வங்காளவிரிகுடாவில் மட்டக்களப்புக்கு 200 மைல் தொலைவில் உண்டாகியுள்ள சூறாவளி மேற்குத் திசை நோக்கிச்செல்லும் எனவும் இன்று காலை இச்சூறாவளி மட்டக்களப்புக் கரையைக் கடந்து செல்லலாம் எனவும் காலநிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (உ)

## "வெளிநாட்டில் இப்படி நான் கூறவில்லை"

### பாராளுமன்றத்தில் அமிர் விளக்கம்

(கொழும்பு)

"தமிழ்மக்கள் இந்த அரசின் கீழ் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று நான் வெளிநாட்டில் கூறவில்லை. ஆனால் 1977 ஆகஸ்ட் கலவரம் பற்றி குறிப்பிட்டு மக்கள் பாதுகாப்பின்றி பயந்த நிலையில் வாழ்வதாக குறிப்பிட்டேன்"

பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

இரத்தினபுரி எம். பி திரு புஞ்சிதுலக பேசுகையில், சபை உறுப்பினர் ஒருவர் அமெரிக்காவில் இந்த அரசின்கீழ் தமிழ்மக்கள் கொடுமையாக நடத்தப்படுகிறார்கள் என்று 'மடறாஸ் ஹிந்து' என்ற பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருப்பதாகக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ அமிர்தலிங்கம், "இது பற்றி நான் தனிப்பட்ட விளக்கம் அளிக்க விரும்புகின்றேன். தமிழ்மக்கள் இந்த அரசின்கீழ் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று நான் வெளிநாட்டில் கூறவில்லை. குறித்த பத்திரிகையை நான் பார்க்கவில்லை. ஆனால் 77 ஆகஸ்ட் கலவரம் பற்றி குறிப்பிட்டேன். மக்கள் பாதுகாப்பின்றி பயந்த நிலையில் வாழ்வதாகக் குறிப்பிட்டேன்."

உபசபாநாயகர்: "எதிர்க்கட்சித் தலைவர் கூறியதை இரத்தினபுரி எம் பி ஏற்றுக்கொள்ள வேண்டும்."

இரத்தினபுரி எம். பி: எதிர்க்கட்சித் தலைவர் கூறு (6-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் ரத்து!

(புலோலி)

சுதந்திரக்கட்சி அரசாங்க காலத்தில் கிளிநொச்சியில் உச்ச வரம்புத் திட்டத்தின்கீழ் சுவீகரிக்கப்பட்டு வட பகுதியில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்ட காணித்துண்டுகள் தற்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் சுவீகரிக்கப்பட்ட இக்காணிகள் வடபகுதியில் உள்ள நூற்றுக்கும் அதிகமான படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு தலா 3 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது.

அவர்கள் அக்காணிகளைப் பண்படுத்தி பசளையிட்டு பெருமளவு பணத்தைச் செலவு செய்து பராமரித்து வந்தனர்.

ஆனால் இக்காணிகள் யாவும் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நிலச் சீர்திருத்த ஆணைக்குழு இளைஞர்களுக்கு அறிவித்துள்ளது.

ஏமாற்றமடைந்த இளைஞர்கள் காணி அபிவிருத்தி அமைச்சர் யாழ் மாவட்ட காணிச்சீர்திருத்த ஆணைக்குழுத்தலைவர் காணிச் சீர்திருத்த அதிகாரச் செயலாளர் டளை உதவி அரசாங்க அதிபர் கிளிநொச்சி எம் பி தமது தொகுதிகளின் எம். பிக்களிடம் காணிகளை திரும்பவும் தமக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர். (க)

காங்கேசன்

ஸீமெந்து தொழிற்சாலை

காங்கேசன் துறை.

## 1979 ஆண்டுக்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

1979-ம் வருட காலத்திற்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையுடன் தம்மை வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் யாழ். மாவட்டத்திலுள்ள வழங்குநர்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. எழுதுகருவிகள்
2. காரியாலய உபகரணங்கள்
3. தளபாடங்கள்
4. மின்சாரப் பொருட்களும், இணைப்புகளும்
5. பெயின்டுகள், வாணிஸ்கள் உட்பட பொது இரும்பு பொருட்கள்
6. மலசலகூட, வீட்டுப் பாவனை இணைப்புகள்
7. பொறியியல் பொருட்கள், கருவிகள் மற்றும் சாதனங்கள்
8. கயிறு, தும்பு, தும்புக் கட்டு, ஈர்க்குக்கட்டு மற்றும் நார்க்கடகங்கள்
9. மோட்டார் உதிரிப் பாகங்கள்
10. மரத்துண்டுகள்
11. மண் பாத்திரங்கள் கண்ணடிப்பாத்திரங்கள்
12. ஆற்று மணல், குருகு மணல், நொருக்கிய உலோகங்கள்

### சேவைகள்

1. அச்சடித்தல்
2. தையல் வேலைகள்
3. தட்டச்சு, ரோனியோ, கல்குலேற்றர், யந்திரங்கள் பழுதுபார்த்தல்
4. காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கும் காங்கேசன்துறையிலிருந்து புத்தளத்திற்கும் லொறி போக்குவரத்துச் சேவை
5. எரிபொருள் இன்ஜெக்டர்கள் பழுது பார்த்தல்

பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், சேவையாளர்கள் தங்களால் வழங்கப்படக்கூடிய சேவைகளின் வகைகளையும், பொருட்களையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். வழங்குநர் ஒன்றுக்கு மேற்பட்ட சேவைக்கு தம்மை பதிவு செய்ய விரும்பின் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும். பதிவு செய்யப்பட்ட வழங்குநர் பட்டியலிலிருந்தேவழமையாக விலைக்கூறுகள் கோரப்படும் எனினும் மற்றைய வழங்குநர்களிடமிருந்தும் விலைக்கூறுகள் கோரும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு.

ஒழுங்கான இடைவேளைகளில் விலைக்கூறுகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது விலைக்கூறுகள் சமர்ப்பித்த பின் பொருட்களை/சேவைகளை வழங்கத்தவறும் வழங்குநர்கள்சேவையாளர்கள்பெயர்கள் பட்டியலில்இருந்துநீக்கப்படும்

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் '1979 இன் வழங்குநர்கள் பதிவு' என உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டு கீழே ஒப்பமிடப்பட்டவருக்கு 1978 டிசெபர் 7-ந் திகதிக்கு பிந்தாது கிடைக்கக்கூடியதாக திவத்தாலில் அனுப்பப்படுதல்வேண்டும்.

குறிப்பு:-

யாழ் மாவட்ட எல்லைக்குள் உள்ள நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

தொழில் முகாமையாளர்.

காங்கேசன்

சீமெந்து தொழிற்சாலை,

காங்கேசன் துறை,

978-11-16. 0847

## வெற்றுச்சாக்கு விற்பனை

வலி-கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு இவற்றைக் கார்த்திகை மாதம் 27-ம திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கேள்விப்பத்திர முற்பணம் 50 ரூபாவும், விண்ணப்பப் பத்திரத்திற்கு 2/- ரூபாவும் மொத்தம் 52/- ரூபா கட்டி விண்ணபபப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் கார்த்திகை மாதம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை(28-11-78)க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத்தபாலின் இடதுபக்க மூலையில் ''வெற்றுச்சாக்கு'' விண்ணப்பம் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

வலி-கிழக்கு வடபகுதி பலநோக்க கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

0858

## கோட்டு விற்பனவு விளம்பரம்

MB 14107

1. வே. நடராஜாவும் பெண்
2. மகேஸ்வரியும் இருவரும் காரைநகர் கிழக்கு, காரைநகர்.

வழக்காளிகள்

எதிராக

1. கணபதிப்பிள்ளை சுப்பிரமணயமும், 2. பெண் சிவபாக்கியமும் இருவரும் விளானை காரைநகர் கிழக்கு காரைநகர்,

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் MB 14107ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபாய் 3131/66 பின் 27-9-73 தொடக்கம் 25-9-74 வரைக்கும் ரூபா 2000 க்கு 7 வீத வட்டியும் பின்முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 315-30 இதில் ரூபா 1000 கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தீவுப்பகுதி காரைநகர் கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை சோதியாண்ட தோட்டம் நி. பர. 8 ஆட்சிப்படி நி. ப. 10 (பத்து) வீடுகள் பனைகள் வடலிகளும் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ரேட்டு வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்கும் கணபதிப்பிள்ளை கைம்பெண் நாகம்மாவுக்கும் உரியவாதனங்கள் மேற்கு உறுதி கொடுப்பவரின் 1ம் பேருக்கும் அம்பலவாணர் இரத்தினத்துக்கு முரியவாதனங்கள் தெற்கு அம்பலவாணர் இரத்தினத்தினுதனம் இதடங்கலும்.

சி. செ. மாரிமுத்து

நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

விதானைவளவு,

சித்தன்கேணி,

17-10-78. 0857

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

24ம் நம்பர், பண்ணை ரோட், யாழ்ப்பாணத்தில் உள்ள தகரத்தாலான கருச் கட்டடம் 120அடி நீளம் 40 அடி அகலத்தில் விற்பனைக்குண்டு. மில் போடுவதற்குச் சிறந்தது மரம், வளை, தகரம் யாவும் நல்ல நிலையில் உள்ளது. நேரில் பார்வையிட்டு, விலை விபரத்திற்கு மேற்படி கருச் உரிமையாளர் சில்வாவுடன் தொடர்புகொள்ளவும். 0850

யாழ். நகரில் இரண்டு கடைகள் விற்பனைக்கு உண்டு சப்பல் வீதியில் (முதலாம் குறுக்குத் தெருவுக்கு அருகாமையில்) விபரங்களுக்கு! ஆர். செல்லையா அன் கோ, 281/A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 0855

## கேள்வி விண்ணப்பம்

### இசுசு லொறி (காப்இல்லாத மொடல்)

வலி-கிழக்கு வடடகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய லொறிக்கு பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரர்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தையும் கேள்விக்கொத்தையும் (4-12-78) ஆம் திகதிக்கு முன் பெற்று 11-12-78 க்கு முன் பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் சீல் இட்ட தபால் உறையில் இடதுபக்க மூலையில் ''பொடி அடித்தல்'' எனக் குறிந்து விண்ணப்பிக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்

வ. கி. வ. ப. ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி.

0859

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட மன்றில்

காலஞ்சென்ற முருகேசு சிவசம்பு, கிளிநொச்சி என்பவரின் பரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3408

எதிராக

முருகேசு சிவசம்பு கைம்பெண் கனகம்மா ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி. மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு மார்சழி மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1978 ம் ஆண்டு புரட்டாதி மாதப் 28-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்,

பதிவாளர்.

வரைதல்:

செ. மகேசன்,

மனுதாரின் சட்டத்தரணி.

0852

காரைநகர் வடக்கு கிராமசபை

## 1979ம் வருடத்திற்கான கேள்வி அறிவித்தல்

காரைநகர் வடக்கு கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் 1979ம் ஆண்டுக்கான கீழ்வரும் பொருட்களை விநியோகிப்பதற்கு 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி முற்பகல் 10-00 மணிவரை அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் கீழ்குறிப்பிடப்படும் மீளளிக்கப்படும் பிணைப் பணமும் மீளளிக்கப்படாத பத்திரப்பணமும் செலுத்தி 5-12-78 முற்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படவேண்டும் மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

1979ம் வருடத்திற்கான கேள்விகள்:

| | பிணைப்பணம் ரூபா சதம் | பத்திரப் பணம் ரூபா சதம் |
|---|---|---|
| 1. மின்சார தண்ணீர்திட்ட உபகரணப் பொருட்கள் விநியோகம் | 200-00 | 25-00 |
| 2. சுகாதாரப் பகுதிப் பொருட்கள் விநியோகம் | 50-00 | 10-00 |
| 3. அச்சிட்ட படிவங்கள், காகிதாதிகள், எழுதுகருவிகள், வண்டி, வாசன இலக்கத் தகடுகள் விநியோகம் | 100-00 | 20-00 |
| 4. சீருடை விநியோகம் | 50-00 | 10-00 |

அன்ரன் அல்பிரட்,

விசேட ஆணையாளர்,

காரைநகர் வடக்கு கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,

காரைநகர் வடக்கு

காரைநகர்.

1978-11-20. 0861

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வெளிநாட்டு மின்சார உபகரணங்களை விற்பனைக்கு இறக்குமதி செய்துள்ளோம்:

கீழ்க்காணும் பொருட்கள் மிகவும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்:

''RED HEART'' ELECTRIC IRON-ரெட்காட் அயன்

''ANCHOR'' மின்சார உபகரணங்கள்

''ELLORA'' மின்சார சுவிச் வகைகள்

''MEM'' இங்கிலிஷ் மெயின் சுவிச் வகைகள்

''CRABTREE'' TRIP SWITCH ''ட்ரிப் சுவிச்'' மற்றும் சுவிச்சுகள்.

P V C வயர் இனங்கள்.

அத்துடன்

இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட

''றலி'' சைக்கிள்

எல்லாவிதமான நீர் இறைக்கும் இயந்திரங்கள் இன்னும் அனேக சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்!

நியூரோன் எலக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7016

## பொதுமக்களுக்கு ஓர் அறிவித்தல்

### ராமேஸ்வர, சிதம்பர ஆலயங்களின் தரும ஆதீனச் சொத்துக்கள்

மேற்படி கோவில்களுக்குச் சொந்தமான காணிகள் வடமாநிலத்தில் உள்ளன. இவை தமிழ்நாடு அரசின் சைவதரும அறநிலையத்தின் பாதுகாப்பில் உள்ளன. யாழ்ப்பாணத்தில் சைவப் பெரியார்கள் பலர் இச் சொத்துக்களின் பாதுகாவலர் என்று தவறுகத் தம்மை அறிவித்து, காணிகளை விற்றும், குத்தகைக்குக் கொடுத்தும் இன்னும் தவறுன வழிகளில் அவற்றைக் கையாண்டும வந்துள்ளனர். இவ்விதகாணிகள் பற்றிய விபரங்களை அறிந்தவர்கள் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இச் சொத்துக்கள் மூலம் பெறப்படும் நிதிவருவாயைத் தமிழ்நாடு அரசு இலங்கையின் சைவதரும காரியங்களுக்குச் செலவிட இணக்கம் தெரிவித்துள்ளதால் இத்தருமச் சொத்துக்களைப் பாதுகாத்து துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்கவும் அவற்றின் இன்றைய உரிமையாளரான தமிழ்நாடு அரசின் பொறுப்பில் காணி விபரங்களை ஒப்படைக்கவுமே இவ்விபரங்கள் தேவைப்படுகின்றன என்பதை அறியத் தருகின்றேன்.

C. பாலசிங்கம்

சட்டத்தரணி

(தமிழ் நாடு அரசின் சைவ-தரும அறநிலையச் சார்பில்)

25, கச்சேரி நல்லூர் வீதி,

யாழ்ப்பாணம். 0862

ஈழநாடு
The Eelanaadu

## உத்தரவாத விலை

உள்ளூரில் உற்பத்தியாகும் வெங்காயம், மிளகாய் ஆகிய இரு முக்கிய பொருள்களுக்கும் உத்தரவாதவிலை நிர்ணயிக்கும்படி வடபகுதி விவசாயிகளும், மக்கள் பிரதிநிதிகளும் வெகுநாட்களாகவே குரல்எழுப்பி வருகிறார்கள்.

இப் பகுதிக்கு வருகை தந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களிடமும் இது பற்றி எடுத்துக்கூறப்பட்டது.

பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் இது வரைக்கும் எதுவித பயனும் ஏற்படவில்லை,

மிளகாய், வெங்காயம் இறக்குமதியால் வடபகுதி விவசாயிகள் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை

இப் பொருட்கள் மீது கடந்த அரசு இறக்குமதித் தடைவிதித்தபோது மிளகாயின் விலை 40 ரூபாய் வரையில் உயர்ந்தது உண்மைதான், ஆனால் காலப்போக்கில் அந்த விலை கணிசமான அளவு குறைந்ததையும் மறைக்கமுடியாது. விவசாயிகள் முழு ஊக்கத்துடன் செயல்பட்டதே இதற்குக் காரணமாகும். விவசாயிகளுக்கு மேலும் ஊக்கமளிக்கப்பட்டு, உற்பத்தியான பொருட்கள் எல்லா பகுதிகளிலும் சமமாகக் கிடைக்கக்கூடியவகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரித்து தட்டுப்பாடு நீங்கவும் விலைகள் நன்றாகக் குறையவும் வழிபிறந்திருக்கும்.

ஆனால் ஏதோ காரணம் காட்டி அரசு இப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்வதில் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றது அத்துடன் இப் பொருட்களை வடபகுதி துறைமுகங்களிலேயே கப்பல் மூலம் இறக்குமதிசெய்யவும் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

உத்தரவாத விலையும், நிர்ணயிக்கப்படவில்லை, இறக்குமதியுந்தடை செய்யப்படவில்லை, என்ற நிலையில் இப்பொருட்களை வடபகுதியிலேயே இறக்குமதியும் செய்வதானல் விவசாயிகள் எவ்வாறு ஊக்கத்துடன் இப் பொருட்களை உற்பத்திசெய்வதில் ஈடுபடமுடியும்? மாறாக இவர்கள் மனம்தளர்ந்து வருமானம்தரக்கூடிய வேறு பொருட்களைத்தான் உற்பத்திசெய்ய முனைவார்கள்.

இந்த நிலைமையில், வெங்காயம், மிளகாய் உற்பத்தியாளர்கள் தமக்கென கூட்டுறவுச்சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அரசுடன் தொடர்புகொண்டால் உத்தரவாதவிலை நிர்ணயிப்பது சுலபமாக இருக்கும் என்று வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

இத்துடன் வடக்கிலும் தெற்கிலுமுள்ள வெங்காயம், மிளகாய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கிடையில் கருத்துவேறுபாடு இருப்பதாகவும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

பொதுவாக வரண்டபிரதேசமான இங்கு நீர்ப்பாசனம், உரமிடுதல் போன்றவற்றுக்கு பெருஞ்செலவு ஏற்படுகின்றது. தெற்கிலோ வெனில் மழைநீரும், ஓடைகள் ஆறுகள் ஏன் பாசனமும் காடுகளில் இருந்துவரும் இயற்கைப் பசளையும், வண்டலும் விவசாயிகளுக்கு செலவைக் குறைக்கின்றன. எனவே இருபகுதி விவசாயிகளுக்கு மிடையில் கருத்து வேறுபாடு இருப்பது தவிர்க்க முடியாததான்

எனவே வெங்காயம் மிளகாய் போன்ற பயிர்களை உற்பத்திசெய்யும் இப்பகுதி விவசாயிகள் தொடர்ந்து விரக்தியடையாதவாறு இப்பொருட்களின் இறக்குமதி, உத்தரவாதவிலை போன்ற விஷயங்களில் அமைச்சர் மேலும் தயக்கங்காட்டாது ஒரு முடிவு எடுப்பது அவசியம்.

---

ஆட்சி மன்றத்திலிருந்து எஸ்.எம். கோபாலரத்தினம்

# மிளகாய்-வெங்காய விஷயமானலும் முதல்நாள் விவாதத்தில் காரமில்லை

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின்இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தை தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நல்லூர் பிரதிநிதியுமான திரு. மு சிவசிதம்பரம் நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்தது எந்த அரசாங்கத்தினதும் வரவு—செலவுத் திட்டம் ஒரு குறிக்கோளைக்கொண்டு ஒரு திசையைக் காட்டுவதாக இருக்குமென்றும், இந்த வரவு—செலவுத் திட்டத்தில் எந்தக் குறிக்கோளும் இல்லையென்றும் எடுததுக்காட்டி தமது வாதத்தைக் கட்டிஎழுப்பினார். தமக்கே உரித்தான சிம்மகதரலில் வரவு — செலவுத்திட்டத்திலுள்ள குறைகளை எடுத்துக் காட்டிய திரு சிவசிதம்பரம் வெங்காயம், மிளகாய் பற்றியும் குறிப்பிட்டு வடபகுதி விவசாயிகள் இதனல் பாதிக்கப்பட்டுள்ளதுபற்றியும் சுட்டிக்காட்டினார்.

வெங்காயமும் மிளகாயும் காரமானவைகளாக இருந்தபோதிலும் வரவு — செலவுத் திட்டத்தின்மீதான விவாதம் ஆரம்பமான முதல்தினத்தில் சிற்சில சமயங்களில் சிலசில வெடிகள் கிளம்பினவேயன்றி காரசாரம் அதிகம் இடம்பெற்றதென்று சொல்லமுடியாது

வடபகுதியில் மிளகாய்வெங்காயச் செய்கைக்கு செலவு அதிகமாகிறதென்பதைத் தாம் ஆராய்ந்து வருவதாகக் கூறிய வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நுவரெலியாப்பகுதியில் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் தமக்கெனத் தனியாக ஒரு சங்கம் அமைத்திருப்பதுபோல வடபகுதியிலும் வெங்காயம், மிளகாய் செய்கைபண்ணுபவர்கள் தமக்கெனத் தனியான தொரு சங்கம் அமைத்துக்கொண்டால் அவர்களது பிரச்னைகளை சுலபமாக ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கலாமென்றும் யோசனை தெரிவித்தார்.

வரவு—செலவுத்திட்டத்தின் மீதான முதல்நாள் விவாதம் சில கட்டங்களில் சூடுபிடிக்கக் காரணமாக இருந்ததென்றால் இதற்கு கம்பகா பிரதிநிதி திரு எஸ். டி. பண்டாரநாயக்காவும் அனுராதபுரப் பிரதிநிதி திரு. எட்வின் அபயரத்னவும் பெருமளவு காரணமாக இருந்தனர் என்று சொல்லலாம்

முன்பொருகாலத்தில் மாவோ பாட்ஜ் அணிந்து ஆட்சிமன்றத்துக்குள் வந்து அமர்ந்த கம்பகா பிரதிநிதி திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையில் திரு எட்மண்ட் விக்கிரமசிங்கா தலைமையில் உயர்தரக் குழுவொன்று சீனவுக்குச் சென்று திரும்பியதுபற்றிக் குறிப்பிட்டு முப்பது ஆண்டுகளுக்கு முன் விடுதலைபெற்ற சீனவில் எந்தப பிரச்னையும் இல்லையென்றும், அங்கு எல்லாப்பிரச்னைகளும் தீர்க்கப்

(5ம் பக்கம் பார்க்க)

---

## இன ஒற்றுமையில் அமைச்சர் சிறில் மத்யூவின் பங்கு என்ன?

### பாராளுமன்றத்தில் நல்லூர் 'சிவா' கேள்வி

(கொழும்பு)

"மக்களின் பிரச்னைகளுக்குப் பரிகாரமாக இந்த வரவு-செலவுத்திட்டம் அமையமாட்டாது; இது தவறான பாதையில் இட்டுச் செல்கிறது. வசதிபடைத்தவர்களுக்கே மேலும் வசதிகள் அளிக்கப்படுகின்றன"

இவ்வாறு 1979ம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட உரை மீதான விவாதத்தை எதிர்க்கட்சியின் சார்பில் ஆரம்பித்துப்பேசிய தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் உறுப்பினருமான திரு எம் சிவசிதம்பரம் சபையில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:

இன ஒற்றுமையை வலுப்படுத்துவதில் அரசு வெற்றி கொண்டு வருவதாக நிதி அமைச்சர் தெரிவிக்கின்ற போது அரசின் கைத்தொழில் விஞ்ஞான [illegible] அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்யூவின் பங்கு அதில் என்ன என்பதை நாம் அறியவிரும்புகிறோம் ஒருவாரத்தின்முன்பு கூட பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக அமைச்சர் இச்சபையில் தெரிவித்த நியாயமற்ற கருத்துக்களுக்கும் தன்னுடைய அமைச்சோடு சம்பந்தப்படாத ஒரு விடயம் பற்றி தனது வீட்டில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடாத்தி தெரிவித்த விடயங்

(6-ப் பக்கம் பார்க்க)

---

### மணிவாக்கு

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், நன்றே நினைமின் நமன் இல்லை".
—திருமூலர்

---


# தமரோன் எல்.சி.60

ஒரு புதிய அற்புதமான BAYER சர்வ பூச்சி நாசினி

குத்தும், உறிஞ்சும், கடிக்கும் அரிக்கும் எல்லாப் பூச்சிகளை அழிக்கும்.



## பயிரைப் பாதிக்கிறதா? வருவாயைக் குறைக்கிறதா?

பூச்சி, புழுக்கள் பயிரைப் பாதிக்காமலும் பயிர்களைக் காத்து, அதிக பணலாபம் பெறும் வண்ணம் பல வருட நுட்ப ஆராய்ச்சியின் நுணுக்கத்தால் மேற்கு ஜெர்மனியிலுள்ள பேயர் ஸ்தாபனம் விவசாயிகளின் கவலையை [illegible] தமரோன் எல். சி. 60 கிருமி நாசினியால் உடனே தீர்த்து [illegible] தற்பொழுது [illegible] கையில் [illegible] ஹேகெம் லிமிட்டெட்.

தமரோன் தெளித்தவுடன் தொடர்புக் கொல்லியாகவும், பயிர் சாற்றுடன் சேர்ந்து நீடியகாலம் தங்கும் சக்தி வாய்ந்த நாசினியாகவும் பயன்படுகிறது. குத்தும் உறிஞ்சும், பூச்சி, கபில வெள்ளை ஈ, திரிப்ஸ், தத்துக்கள், அழுக்கணவன், மயிர்ப்புழு, வண்டு ஆகியவற்றையும் கடித்து உண்ணும் இலைமடிப்புழு, அறுக்கும்புழு, கம்பளிப்புழு, இலை சுருட்டி ஆகிய பூச்சி புழுக்கள் எல்லாப் பயிர்களையும் பாதிக்காது கட்டுப்படுத்தும். மிளகாய்-[illegible] ஆகியவற்றை அழிக்கும்.

மரக்கறி வகை: [illegible] புழு, அழுக்கணவன், இலையாப் புழு ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். நெல்: சந்துகுத்தி, இலை சுருட்டி ஆகிய எல்லாப் பூச்சி புழுக்களை அழிக்கும். பருத்தி, சோளம், கரும்பு, வாழை, திராட்சை ஆகிய பயிர்களிலும் பாவிக்கலாம்.

வேறு விபரங்களுக்கு:

## ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு-10.

தொலைபேசி: 93563
96331-6

# ம. கிழக்கு அமைதி: ஓர் அம்சம் நீங்கலாக உடன்பாட்டுக்குத் தயார்

## எகிப்துக்கு இஸ்ரேல் அறிவிப்பு

ஜெரூஸலம், நவ. 22 எகிப்துடன் ஒரு அம்சம் நீங்கலாக சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளத் தாம் தயாராக இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் இவ்வறிப்பு குறித்து அமெரிக்கா வரவேற்புத் தெரிவித்துள்ளது.

**பெகின்**

எகிப்து விரும்பும் பட்சத்தில் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தாம் தயாராக இருப்பதாக நேற்று ஜெரூஸலத்தில் வைத்து இஸ்ரேலியப் பிரதமர் திரு பெகின் அறிவித்தார்.

கேம்டேவிட் உடன்படிக்கை பற்றி வாஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது பாலஸ்தீனிய விவகாரம்பற்றியும் சம்பந்தப்படுத்தவேண்டும் என்று எகிப்து புதிய ஆலோசனைத் திட்டம் ஒன்றினை கொண்டு வந்ததையடுத்து கருத்துவேறுபாடு உண்டாகி பேச்சுவார்த்தையில் இழுபறி உருவாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இஸ்ரேல் கூறியுள்ள ஒரு அம்சம் நீங்கலாக என்று பதம் எசிப்தின் புதிய ஆலோசனை பற்றியதாகவே இருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (உ)

...

## சென்னையை அழகுபடுத்த...

சென்னை, நவ 22 சென்னை நகரை அழகுபடுத்தும் நடவடிக்கையில் தனியாரும் வர்த்தக நிறுவனங்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென தமிழ்நாடு உல்லாசப்பயணத்துறை அமைச்சர் திரு. காளிமுத்து வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

## பூமதியனுக்கு கல்லீரலில் புற்றுநோய்

அல்ஜியர்ஸ், நவ. 22 அல்ஜீரிய ஜனாதிபதி பூமதியனுக்குக் கல்லீரலில் புற்றுநோய் உண்டாகியுள்ளதாகவும் அவருக்கு சிகிச்சையளிக்க பிரெஞ்ச், அமெரிக்க வைத்திய நிபுணர்குழு அல்ஜியர்ஸ் நோக்கி விரைந்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடும் சுகவீனமுற்றுள்ள பூமதியன் சுயநினைவை இழந்துவிட்டார் எனவும் அறிவிக்கப்பட்டது.

இவருக்கு சிறுநீரகத்தில் பாதிப்பு உண்டானமையால் செயற்கை சிறுநீரகம் பொருத்தப்பட்டுள்ளது.

இவருக்கு கடும் சுகவீனம் உண்டானதையடுத்து 9 பேர் கொண்ட புரட்சிச்சபை நாட்டை நிர்வகித்துவருகிறது. அண்மையில் இவர் ரஷ்யாவில் சென்று சிகிச்சை பெற்றுவந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உருவப் படத் திரை நீக்கம்

[புலோலி]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பருத்தித்துறைக் கிளையின் செயலாளரும், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபருமான அமரர் சி. சி. கணபதிப்பிள்ளையின் உருவப் படத் திரை நீக்கமும், இரங்கல் உரையும் எதிர்வரும் 26 ம் திகதி டாக்டர் திரு. அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் அமரர் கணபதிப்பிள்ளையின் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்துவைப்பார்.

கல்வித்திணைக்கள அதிகாரிகளும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் இரங்கல் உரை நிகழ்த்துவார்கள். (உ)

## வீதி சீர்கேடு

[புலோலி]

பருத்தித்துறை நகரில் உள்ள இரண்டாம் குறுக்குத்தெரு சீர்கேட்டினால் மக்கள் போக்குவரத்துச்செய்ய முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி பருத்தித்துறை நகரின் மிகமுக்கிய வீதியாக

(5 ம் பக்கம் பார்க்க)

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை (23-11-78)

**மேடம்:-** தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். ஸ்தலயாத்திரை ஒன்றும் மேற்கொள்ளப்படலாம். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னிலையில் நிற்பீர்கள்.

**இடபம்:-** தொழில் துறையில் வெற்றியுண்டு. வியாபாரத் தொடர்பு பெருகும் சிலருக்கு இடமாற்றமும் கிடைக்கும்.

**மிதுனம்:-** வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்கு படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த விவகாரமொன்று சாதகமான முடிவைத்தரும்.

**கடகம்:-** வாழ்க்கையில் புதியானநிலை தென்படும் எதிலும் தயக்கம் ஏற்படும். பொருள் விரையத்திக்கும் இடமேற்படும்.

**சிங்கம்:-** எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும். ஆவை போக்கு மற்றவர்களில் வெறுப்பைத் தேடித்தரும். எச்சரிக்கைநன்று.

**கன்னி:-** கடமையாற்றும் இடத்தில் சிறப்புக்கிடமுண்டு டாக்டர்கள் போற்றப்படுவார்கள். தூரத்துச் செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும்.

**துலாம்:-** அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும் விழிப்புடன் இருக்கவும்

**விருச்சிகம்:-** ஆராச்சிகளில் அதிக ஆர்வம் பிறக்கும் கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும் தாய்வழி தனவரவிற்கும் இடமுண்டு.

**தனுசு:-** மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும் தொழில்துறையிலும் மகிழ்ச்சியுண்டு.

**மகரம்:-** ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும். முன்னேற்றத்தை தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள்.

**கும்பம்:-** இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும்

**மீனம்:** கடமையில் தடைகள் ஏற்படும் திடீர் விபத்துக்கும் இடமேற்படும் அவதானம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை



வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
பாலாஜி
அன்புளங்கே

Rio (Jaffna)
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - சரோஜாதேவி
தாமரை நெஞ்சம்

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள் போன்: 466
4-வது ஜனத்திரள் வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம் நடித்த
அ நு ரா க ம்

சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி [யாழ். நகர்]
எஸ். எஸ். ஆர்- விரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
நடித்த
சிவகெங்கைச் சீமை புதியபிரதி

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 6-30, 9-45.
Gamini Fonseka (22—23 only)
Chandi Shyama (SINHALA)
24-11-78 "சொல்லத்தான் நினைக்கிறேன்"
27-11-78 "BLOOD MONEY"

இன்று மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-15
திருடாதே [புதிய பிரதி]
24-11-78 முதல்
சிவாஜி — சரோஜாதேவி நடித்த சபாஷ் மீனா

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Robert Hunter
in
MARCO POLO
(Color-Scope)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜக்கம்மா
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ [யாழ்.நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

26-11-78 வரை
தினசரி 10-30, 2-30, 6-30 9-15
ராஜா (யாழ்நகர்)
மரிக்கார் ராமதாஸ்
ஹெலன் குமாரி.
மற்றும் பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து
ஏ மா ளி க ள்


## திருவாவடுதுறை ஆதீனம்

# ஆறுமுகத்திற்குப் பட்டம் வழங்கிப் பெருமை பெற்றது

– சு. கனகசபாபதி –
(அதிபர். கைதடி குருசாமி கனிஷ்ட வித்தியாலயம்)

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூஜை தினம் இன்று நடைபெறுவதை யொட்டி இக்கட்டுரை வெளியாகிறது].

தமிழ் பேசும் நல்லுலகில் நாவலர் என்றபெயர் காதில் விழுந்ததும் ஆறுமுகநாவலரின் உருவம் மனத்திரையில் விழும் நாவன்மை படைத்த காரணத்தால் இவருக்கு இப்பெயர் உண்டாயிற்று. இப்பெயரை இவருக்கு நல்கியதால் திருவாவடுதுறை ஆதீனத்துக்கும் கீர்த்தி பெருகியது.

பிரசங்கம் என்பது ஒரு கைவந்தகலை இன்றைய ஜனநாயக உலகில் இது மிகப் பிரசித்தமானது. இதனை வித்திட்டு வளர்த்து கனியை உண்ணத்தந்த பெருமை ஆறுமுகநாவலருக்கே உரியது. ஆறுமுகம் என்ற இளமைப் பெயர் அறிவும் திறனும் ஆற்றலும் அருளும் வளர வளர ஆறுமுகநாவலர் என்றாயிற்று.

அறிவுலகில் மட்டுமல்ல அரசியல் வானிலும் இவர் மிகவும் மகத்தானவர். துவைஎம்துரை என்பவருக்கு மாருக இளம் அரசியல் ஞானி இராமநாதன் துரையைச் சட்ட நிருபணசபைக்கு அனுப்பி வைத்த பெருமை இவருக்கே உரியது.

இவர் மத்தியகல்லூரியில்பார்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றார். அவருக்குத் தமிழ் கற்பித்தார். அப்பாடசாலையில் ஆசானாகவும் கடமையாற்றினார், இத்துடன் அமையாது வடமொழியிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல அமைந்திருந்தது அவரின் 'பைபிள்' மொழி பெயர்ப்பு

இவர் வண்ணார்பண்ணை கோப்பாய் புலோலி சிதம்பரம் போன்ற இடங்களில் சைவப்பாடசாலைகளை நிறுவிக் கல்வி கற்பித்தார். பிடியரிசி தண்டியே ஆசிரியர்களின் வேதனத்தை ஈடு செய்தார். அத்துடன் அமையாது கஞ்சித் தொட்டித் தருமத்தையும் ஆரம்பித்து நடாத்தினார்.

நூல்கள் அறிவுக்கு வித்தானவை இவை கருவிநூல்கள் அறிவு நூல்கள் என வகைப்படுததப்படும். இவற்றை அச்சிட்டு வெளியிட சென்னையில் ஓர் அச்சுயந்திரம் நிறுவினார். சென்னையில் இதன் மூலம் நூல்கள் வெளிவரலாயின.

முதலாம் இரண்டாம் சைவ வினாவிடை போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார். திருமுருகாற்றுப்படை கோயிற்புராணம் போன்றவற்றிற்கு உரைகண்டார். சூடாமணிநிகண்டு சௌந்தரியலகரி போன்ற நூல்களை உரையுடன் பரிசோதித்து வெளியிட்டார். இலக்கண வினாவிடையும் இவரின் சொந்த ஆக்கமேயாகும்.

இப்பெரியாரைச் சைவ உலகுக்கு அளித்த நல்லூரில் ஆலயமும் சிலையும் நிறுவப் பட்டுள்ளது.

## வீதி...

4-ம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தும் பலகாலமாக கவனிப்பாரற்றநிலையில் இருந்து வருவதுகண்டு மக்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர் இந்த வீதியில் பெருங்கிடங்குகள இருப்பதனால், அப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து அகற்றப்படும் கழிவுநீர் தேங்கி நின்று சேறு, சுரி உண்டாகியிருப்பதுடன் சுகாதாரக் கேடான துர்நாற்றமும் வீசிக் கொண்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள இதுவிடயத்தில் கவனமெடுப்பரா என கேட்கப்படுகிறது.

(உ)

# அவதார புருஷர் ஸ்ரீ சத்யசாயி பாபா



- க. சபாரத்னம் -

இன்று உலகமுழுவதும் உள்ள பகவான் சத்தியசாயி பாபாவின் அடியார்களும் சத்தியசாயி ஸ்தாபனங்களும் அவருடைய 53-வது பிறந்த தினத்தை ஒட்டிவிழா எடுக்கின்றனர்.

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவும் ஓர் அவதார புருஷர் என்பதை இன்று கோடிக் கணக்கான மக்கள் ஏற்றுள்ளனர். சாதாரணமக்கள் இவ்வுண்மையைத்தாமாகவே அறியும் வல்லமைமலர் என்பதால் பகவானே நான் ஓர் அவதாரபுருஷர் என்பது பற்றி முறைக்குமுறை எடுத்துக்கூறியுள்ளார்.

இவர் தாய் வயிற்றில் உதித்த காலம் தொடக்கம் இன்று வரை இவருடைய வாழ்க்கையும் சூழலும் தெய்வீக சக்திகளினால் மிளிரக் காண்கின்றோம். அவர் தாய் வயிற்றில் இருக்கும் போதே அவர் வீட்டில் இருந்த இசைக்கருவிகள் இரவு வேளைகளில் தாமாகவே தெய்வீகமான இசையை மீட்டின. இதைக்கண்டவர்கள் மர்மமறியாது மலைத்தனர்.

இவர் சிறுபிள்ளையாயிருக்கும் போதே தனது பார்வையாலும் பரிசத்தாலும் விபூதி பிரசாதத்தாலும் குணபடுத்திக்கொண்டேயிருக்கின்றார். ஓர் ஊமையைப் பேசவைத்ததும் இறந்த ஓர் அமெரிக்க அடியாரை உயிர்ப்பித்ததும் இவற்றுள் அடங்கும்.

அவரை அறிவதற்குச் சாதாரண மனிதர்களால் முடியாது. நீங்கள் உங்களையே அறிந்து கொள்ள முயற்சியுங்கள் அது என்னையும் அறிவதற்கு உதவும் எனக் கூறியிருக்கின்றார்.

நான் வந்த காரியம் மனித வர்க்கத்தினுடைய ஆத்ம ஈடேற்றத்தை சத்தியத்தினாலும் அன்பினாலும் ஊக்குவிப்பதற்காகும்.

நீங்கள் இறைவனை அடைவதற்குச் சுலபமான வழி

[6ம் பக்கம் பார்க்க)

## மிளகாய்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதென்றும், அங்குள்ள விலைவாசிகளையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினார். சீனா இந்த அளவுக்கு முன்னேறியிருக்கையில் இலங்கை ஏன் முன்னேறவில்லை யென்ற கேள்வியையும் எழுப்பிய திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா இதற்கு ஒரு மார்க்கமும் சொன்னார். இந்த நாட்டிலுள்ள சகல கட்சிகளும் தங்களது கொள்கைகளை மறுபரிசிலனைசெய்து எல்லோரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டுமென்றும் இல்லையேல் ஒரு பெரும் புரட்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசுகையில் அரசதரப்பிலிருந்து குறுக்கீடுகளும் இடையூறுகளும் எழுந்தன. அதற்கும் அவர் பதிலளித்துக் கொண்டிருந்தார். ஒருகட்டத்தில் "உங்கள் கட்சியின் நிலை" என்று அரசதரப்பு எம். பி, ஒருவர் சொன்ன போது "எங்கள் கட்சியை நாங்கள் சரிசெய்துகொள்ளுவோம் நீங்கள கவலைப்பட வேண்டாம்" என்று திரு. அநுரா பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்டார்.

வரவு—செலவுத்திட்ட விவாதத்தில் வழமைபோலவே நேற்றும் சில உறுப்பினர்கள் முன்னைய அரசு செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சாடியதுடன் இப்போதுள்ள வரவு—செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்குமென்றும் வாதாடினர் அநுராதபுரம் எட்வின் அபயரத்தின எஸ். டி. பண்டாரநாயக்காவுக்குப் பதிலளித்துப் பேசினார். பொதுவாக முதல் நாள் விவாதம் மந்தமாக இருந்தபோதிலும் சில வேடிக்கைகளையும் காணக்கூடியதாக இருந்தது.

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
யோன் செல்லத்துரை செல்வரத்தினம்
பலாலி றோட், கோண்டாவில்.

வழக்காளி

எதிராக

வழ. இல. சாக. சு. 277
கந்தையா செல்லத்துரை பெண் மங்கயற்கரசியும்
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிராளி

மேற் சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 28,708/-க்கும் ரூபா 25.000/-க்கும் 24-11-77 தொடக்கம் 20-1-78 வரையும் 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகையும் கொடுக்கும் வரையும் 5% வீத வட்டியும் கோட்டுச் செலவும் (பின்பு அறிவிக்கப்படும்) அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1-78-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "நீரியோலை" இதன் நிலப்பரப்பு 18ம் குளி 15½ ம இதில் பிரிக்கப்பட்ட நி. பர. 9ம் குளி 4½ம், முதலாம் துண்டுக் காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஏகாம்பரம் அவர்களால் 22-11-63-ல், வரையப்பட்ட பட இலக்கம் 452 இதன்படி நில பர 9ம் குளி 4½ உம், இதில் எல்லைகள் கிழக்கு சுப்பிரமணியம் பெண் நாகரத்தினத்தின் ஆதனம். வடக்கு முருகேசு பெண் முத்தாச்சியின் ஆதனம், மேற்கு கை ஒழுங்கை தெற்கு வேலுப்பிள்ளை சிவப்பிரகாசத்திற்கும் குலத்துறை பெண் நாகம்மாவுக்கும் உரிய ஆதனம். இதற்கு தெற்கு எல்லையில் இருக்கும்காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் மேற்கெல்லையில் இருக்கும் 12 அடி அகலமான கை ஒழுங்கையும் பாவிப்புரித்தும் உட்பட இதடங்கலும். இதன் பதிவு இலக்கம் டி 383/212.

பொ. பாக்கியநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
20-11-1978.

0851

# மாணவர் அனுமதியில் இப்படியொரு மோசடி?

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச்சங்கம் நடாத்திய முதலாவது பிரிவு உதைபந்தாட்டத்தில் ஒரு கல்லூரி தகுதியற்ற மாணவர்களை ஆட்டக்காரராக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:

கல்வி அமைச்சின் 1962-ம் ஆண்டு சுற்றுநிருபம் இலக்கம் 9இன் 14-ம், 15-ம் பந்திகள்; திட்டவட்டமாக எந்த ஒரு மாணவனும் க. பொ. த. ப. சாதாரண வகுப்பிலோ உயர்தர வகுப்பிலோ மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயில முடியாது என்றும்; பரீட்சை எடுத்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இதற்கு விதிவிலக்கு அரசாங்க வைத்திய அதிகாரியின் அத்தாட்சிப்பத்திரத்துடன் நீண்டகால சுகவீனம் உறுதிப்படுத்தப்பட்டால், கொழும்பில் கல்வி அமைச்சிலுள்ள கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடன் தொடர்ந்து மேலும் ஓராண்டு பயிலலாம் என்றும் கூறுகிறது. ஆனல் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லையென்று அனுப்பிய வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு, இக்கிராமப்புற கல்லூரி அரசியல் தலைவரின் செல்வாக்கைப் பயன்படுத்தி வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினரை ஏமாற்றி கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தை மீறியுள்ளனர் என்றும் அதே கல்லூரியிலிருந்தும் ஏனைய கல்லூரியிலிருந்தும், இம்மாதிரி வைத்திய அத்தாட்சி காட்டி பரீட்சை எடுக்காத வேறு எந்த மாணவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 9600...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட புகாரையடுத்து காங்கேசன்துறைப் பொலிசார் தீவிரபுலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை எவரும் கைதானதாகத்தெரியவில்லை. (உ)

## அவதார...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் நாமத்தைப்பஜனை செய்தலே என்பன அவருடைய திருவகக்கில் சில.

அவர் இன்று செய்து கொண்டிருக்கும் தொழிலை யாழ்ப்பாணம் ஸ்ரீ யோக சுவாமிகளின் கீழ்க்கண்ட நற்சிந்தனையில்காணலாம்.

''ஒற்றுமையிந்த ஊரிடை ஓங்குக
ற்றும் நற்குணம் முற்றும் ஆகுக
கற்றும் கேட்டும் கழலடி போற்றுக
நற்குணம் இந்த நாட்டில் விளங்குக''.

## பால் உணவு விலை உயர்வு ரத்து

(கொழும்பு)

பாலுணவு சம்பந்தமாக அரசு அறிவித்திருந்த விலை அதிகரிப்பை ரத்துச் செய்துள்ளது.

நேற்றுக் காலை பாராளுமன்றம் கூடியபோது வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அரசின் இம்முடிவை அறிவித்தார்.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் ஊடாக விநியோகிக்கப்பட்டு வரும் லக்ஸ்பிறே, எஸ்ளபல, என்பா ஆகிய பாலுணவுகளின் விலைகள் வரவு — செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படு முன் இருந்த விலைகளுக்கே விற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## அஞ்சலிக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இரங்கல் கூட்டமொன்று இன்று மாலை யாழ். வளாக தமிழ் தமிழ் மன்றத்தினரால் யாழ் வளாக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இரங்கல் கூட்டத்திற்கு மன்றத் தலைவர் திரு. சி. விரபத்திரபோடி தலைமை யுரை அஞ்சலிப்பாவை ஜனாப் மன்குரும், ஜனாப் ஏ. காதரும் வழங்குவார்கள். கலாநிதி அ. சண்முகதாஸ், திரு. சி. மௌனகுரு, திரு. க. நாகேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். (கெ)

## "சாதி என்ற சிந்தனை இருக்கக் கூடாது"

(கொக்குவில்)

சாதி அடிப்படையில் கூட்டங்கள் நடத்துவதையோ, அன்றிச் சிந்திப்பதையோ நிறுத்தவேண்டும். இதனால் சாதி என்றால் என்னவென்று கூடத் தெரியாத குழந்தைகளின் தூய உள்ளங்களிலும் விஷ விதையான சாதிப் பாகுபாட்டை புகுத்த எத்தனிப்பவர்கள். எனவே இனிமேலாவது இப்படிப்பட்ட செயல்களைச் செய்யாது இருக்க முன்வரவேண்டும் ''

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெற்ற சிறுபான்மை சமூகங்களும் விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் என்னும் பொருள்பற்றி நடைபெற்ற கலந்துரையாடலில் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வ. சிவபாலசிங்கம் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது. திருவாளர்கள் எம். வி. நடராசா, கே. வி. சண்முகநாதன், எஸ். எம். டேரின்டநாயகம், எஸ். எஸ் சுந்தரம், மற்றும் பலர் பேசினர்கள். [க]

## வெளிநாட்டில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாடுகளில் இவ்வாறு பேசக் கூடாது.''

அமைச்சர் டுரோனி டி மெல்: ''எதிர்க்கட்சித் தலைவர் ஏற்கனவே விளக்கம் அளித்துள்ளார். அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்''

இரத்தினபுரி எம். பி; ''நான் ஏற்றுக்கொள்கிறேன். அவரின் விளக்கம் பத்திரிகையில் வரச்செய்யவேண்டும்:

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம்: ''நாங்கள் எமது தமிழ் ராஜ்யத்தை 1619-ம் ஆண்டு போர்த்துக்கேயரிடம் இழந்தோம்.''

ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ்: ''அதன்முன்பு கோட்டை ராஜ்யத்தின் கீழ் நீங்கள் ஆளப்பட்டீர்கள்?

வி. என். நவரத்தினம்: ''இருக்கலாம்; நாங்கள் கோட்டை ராஜ்யத்தினலும், நீங்கள் நல்லூர் ராஜ்யத்தினலும் ஆளப்பட்டிருக்கலாம்.

எப்படியிருந்தாலும் நாம் தனித்தனி ராஜ்யத்தின் கீழ் மகிழ்ச்சியாகவும், பூரண இறைமையுடனும், அமைதியுடனும், நட்புறவுடனும் வாழ்ந்து வந்தோம்.

பிரதமர்: இவற்றிற்கு எல்லாம் என்ன அவசியம் இருக்கிறது?

வி. என். நவரத்தினம்: எமது அடிப்படை பிரச்னைகளை உணர்ந்துகொண்டால் இந்தப் பிரச்னைகள் எழாது.

பிரதமர்: அவற்றைத் தீர்ப்பதற்கு நீங்கள் எங்களுடன் சேருவதற்கு மறுக்கிறீர்களே?

வி. என். நவரத்தினம்: சேருவது பற்றிய வினு அல்ல. இங்கு பிரச்னைகளை நீங்கள் உணர்ந்துகொண்டால்......

ராஜாங்க அமைச்சர் திரு. அனந்த திஸ்ஸ டி அல்விஸ்: நீங்கள் இந்தப்பக்கம் வந்தால் நாங்கள் அரசியல் அமைப்பை திருத்துவோம்... நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சி (தமிழில் கூறினர்)

வி. என். நவரத்தினம்: முதலில் இந்த நாட்டில் இரு தேசிய இனங்கள் வாழ்கின்றன என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

பிரதமர்: முதலில் நாட்டின் சுபிட்சத்திற்கு ஒன்று சேர்ந்து உழைப்போம்.

திரு. ஆரியரத்ன ஜெயதிலகா (திவுலபிட்டிய): தமிழ் மக்கள் எல்லாரும் கூட்டணி எம். பிக்கள் உட்பட சிங்களவர்களே. யாழ்ப்பாண சரித்திரத்தை வாசித்தால் இது விளங்கும். வட்டுக்கோட்டை சுன்னாகம், எல்லாம் சிங்களப் பெயர்களே. வட்டுகொட, என்பதை நீங்கள் சரியாக உச்சரிக்கத் தெரியாமல் திரிப்பதற்கு நாங்களா பொறுப்பு.

## இன ஒற்றுமையில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குமான தக்க பதிலை இந்த விவாதத்தின்போது உரிய நேரத்தில் நாம் அளிப்போம்.

### வடக்கு கிழக்கில் 17,000 பேருக்கேவேலை

ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்போம் என்று கூறியிருந்தபோது, 40 ஆயிரம் பேருக்கு மேலதிகமாகவே அதாவது ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்திருப்பதாக நிதி அமைச்சர் தெரிவித்தார். இவற்றில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் 17 தொகுதிகளிலும் 1700 பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இது முறையற்றதாகும். இந்த ஆண்டில் எனது தொகுதியில் 10 பஸ் சாரதிகளுக்கு 10 பஸ் நடத்துநருக்கும் மக்கள் வங்கியில் 6 பேருக்கும் இலங்கை வங்கியில் 5 பேருக்கும் மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. நீங்கள் வேலைவாய்ப்பை அதிகமாக வழங்கியிருந்தாலும் எமது நிலை முன்னர் போலவேதான் இருக்கிறது.

### பட்ஜட் ஆர்ப்பரிப்பு அடங்குமுன்...

முந்திய அரசைப்போன்று நீங்களும் வர்த்தமானி மூலம் நள்ளிரவில் விலைகளை அதிகரிக்க மாட்டீர்கள்என நினைத்தோம். ஆனல் உங்களின் கடந்த வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் மா, பால், சிகரட் ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம், தபால் கட்டணம் உயர்த்தப்பட்டன. வரவு செலவுத் திட்ட உரைமீதான ஆர்ப்பரிப்பு அடங்கு முன்னரே இப்போது பால் மாவிலை உயர்த்தப்பட்டது. எதற்காக இந்த பால்மா பொருள்களின் விலையை உயர்த்த அரசு முனைந்தது? வசதி குறைந்த மக்களுக்கு முன்னைய விலையில் இவை வழங்கப்படுமென்றால் 'வசதி குறைந்த' என்பதன் வரைவிலக்கணம் என்ன? அதை அமைச்சர் விளக்குவார் என நினைக்கிறேன்.

### நிதிஅமைச்சர் கோரிக்கை

நிதி அமைச்சர்! என்ன வழிகளைக் கைக்கொண்டாலும் கறுப்புச்சந்தைக்காரர்கள் தமது லாபத்துக்கு வழி கண்டு விடுவார்கள். நாம் 72 சதத்துக்கு குழந்தைகளுக்காக வழங்கும் சீனியில் பெருமளவு கறுப்புச் சந்தைக்கே போகிறது. இவ்வாறே பால் மாவுக்கும் நிகழும். எனவே சீராக விநியோகிக்க திட்டமொன்றைத் தாருங்கள். 35 லட்சம் பால்மா 'ரின்'களில் 25 லட்சம் கறுப்புச் சந்தைக்கே சென்றுவிடும்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசியதாவது:

### வசதிஉள்ளவர்களுக்கே மேலும் வசதி

ரூபா 2000 சம்பளம் பெறுபவர்களுக்கு ரூபா 200 சம்பள உயர்வு அளிக்கிறீர்கள். ஆனல் ரூபா 500 சம்பளம் பெறுபவருக்கு ரூபா 50 மட்டுமே கிடைக்கிறது. இதனல் வசதி உள்ளவர்களுக்கே மேலும் வசதியையும் கஷ்டப்படுபவர்களுக்கு மேலும் கஷ்டத்தையுமே அளிக்கிறீர்கள். உங்கள் நிவாரணம் ஒரு சுமையாகத்தான் இவர்களுக்கு அமையும்.

### வெங்காயம், மிளகாயம் உற்பத்தியாளர்களின் இன்றைய நிலை...

அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையால் பல உள்ளூர்க் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி அடைந்து வந்த பனங்கட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டன, பலர் வேலைஇழந்தனர். மிளகாய், வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்த இளைஞர் இன்று தமது வருமானத்தை இழந்த நிலையில் இதனைக் கைவிட்டுவிட்டனர்.

மிளகாய், வெங்காயத்தின் உத்தரவாத விலை நிர்ணயிக்கும்படி நாம் விடுத்த கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை.

இந்நிலையில் கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையை அரசு மீளாலோசனை செய்யவேண்டும், என்று கோருகிறோம்.

### ரூபா மதிப்பு குறைந்துள்ளது

மூலதானத்தில் 70 வீதத்தை வெளிநாட்டு உதவி மூலம் பெறவிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் ரூபாய் மதிப்பு குறைந்திருப்பதையும் நாம் உணரவேண்டும்.

### அரசியல்விளையாட்டு நடத்தப்போகிறீர்களா?

மகாவலி திட்டம் தொடர்பான ஒல்லாந்து நிபுணரின் அறிக்கையை நாம் அறிய விரும்புகிறோம். வடமத்திய மாகாணமே இத்திட்டத்துக்கு முற்றிலும் வாய்ப்பானது என்று கூறப்படுகிறது. அப்படியானல் நிபுணர்கள் கூற்றை ஏற்கப்போகிறீர்களா அல்லது அரசியல் விளையாட்டு நடத்தப் போகிறீர்களா? (ம-இ)

## நாயன்மார்கட்டில் இன்று நாவலர் விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழக ஆதரவில் ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலில் இன்று மாலை நாவலர் விழா நடைபெறுகிறது. 'சொக்கன்' தலைமையில் இவ்விழா நடைபெறும். [அ]

## நாவலர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் சற்குரு பணிமாலை ஓதலும் மாகேசுரபூஜையும் நடைபெறும்'

மாலை நிகழ்ச்சிகள் சபைத் தலைவர் திரு. ச. செல்வராஜா தலைமையில் நடைபெறும்.

நாவலர் எழுதிய முதலாம் சைவவினவிடை, முதலாம் பாலபாடம் ஆகியவற்றை 'இந்துசாதனம்' ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் வெளியிட்டுவைப்பார். தி. ச. சண்முகக் குமரேசன் முதற்பிரதியை வாங்குவார்.

## பகவான் பிறந்த தினம்

[யாழ்ப்பாணம்]

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 53-வது பிறந்த தின விழா இன்று. ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

யாழ். மத்திய பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தின் சார்பில் நடைபெறும். இவ்விழாவில், இன்று மாலை 5 00 மணி முதல் இரவு 8-30 மணிவரை மங்கள இசை சொற்பொழிவு, நாடகம், நடனம், சுவ்டோத்திரம். பஜனை, தீபாராதனை ஆகியவை நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### வே. இ. தம்பிப்பிள்ளை

காரைநகர் களபூமியைச் சேர்ந்தவரும், கிளிநொச்சி தம்பிப்பிள்ளை அன் சன்ஸ் உரிமையாளருமான வே இ. தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், நவரத்தினம், திருநாவுக்கரசு, தருமரத்தினம், இராசேஸ்வரி, பரமேஸ்வரி, விக்னேஸ்வரி, மோகனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (23-11-78) மாலை 3-00 மணியளவில் காரைநகர் கிழக்கில் நடைபெறும்.

0865


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.